# பா.ஜ.க.வின் ஆணவத்தை தமிழ்நாடு அடக்கிக் காட்டும்!




நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்படும் – “மக்கள் விரோத தொகுதி மறுவரையறை மசோதாவைக் கண்டித்து “தமிழ்நாட்டின் ” வீடுகளில் வீதிகளில், கடைகளில் கருப்புக்கொடி பறக்கட்டும்!” என, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்த அறிவிப்பிற்கிணங்க, கழகத் தலைமை அலுவலகமான சென்னை– அண்ணா அறிவாலய முகப்பில், நேற்று முன்தினம் கருப்புக் கொடி பறக்க விடப்பட்டிருந்த காட்சி!



கழகத் தலைவர் அவர்களின் அறிக்கைக்கிணங்க “Delimitation” என்ற பெயரில் சட்டத் திருத்தம் கொண்டு வந்து, நாடாளுமன்றத்தில் தமிழ்நாட்டின் குரலை ஒடுக்கிடும் வகையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வரவுள்ள கருப்புச் சட்டத்துக்கு எதிராக நேற்று முன்தினம் (16.04.2026 )கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தலைமையில் தி.மு.க. தலைமை அலுவலகமான, அண்ணா அறிவாலயத்தில் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் கருப்புச் சட்டை அணிந்து எதிர்ப்பு தெரிவித்தும், தொகுதி மறுவரையறை திட்ட நகலை எரித்தும் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.




கோபாலபுரத்திலுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் இல்லத்தில் கருப்புக் கொடியேற்றி கோலமிட்டிருக்கும் காட்சி!



சென்னை – தேனாம்பேட்டை– சித்தரஞ்சன் சாலையில் உள்ள, கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் இல்ல முகப்பில், நேற்று முன்தினம் ‘கருப்புக் கொடி’ பறக்க விடப்பட்டக் காட்சி!



தொகுதி மறுவரையறைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், கழக துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி அவர்களின் சென்னை சி.ஐ.டி. காலனியில் உள்ள – தலைவர் கலைஞர் இல்லத்தில் கருப்புக் கொடி ஏற்றப்பட்டது.



தொகுதி மறுவரையறை சட்டத்திருத்தத்தை எதிர்த்து, கழகத் தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, நாடாளு மன்ற மக்களவைக் கழக குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன், இல்லத்தில் கருப்புக் கொடி ஏற்றப்பட்டது.




முரசொலி அலுவலகத்தில் கருப்புக் கொடி ஏற்றப்பட்டிருக்கும் காட்சி!





அரியலூரில் ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் தென்னிந்தியாவின் அரசியல் அதிகாரத்தைப் பறித்து, தமிழர்களைத் தங்களின் சொந்த நாட்டிலேயே அகதிகளாக்கத் துடிக்கும் பாசிச பா.ஜ.க. அரசின் ‘தொகுதி மறுசீரமைப்பு’ எனும் ஜனநாயக விரோத சதியை கண்டித்து கருப்பு கொடி ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் அரியலூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் லதாபாலு, மாவட்ட துணைச் செயலாளர் சி.சந்திரசேகரன், நகர செயலாளர் இரா.முருகேசன், ஒன்றிய பொறுப்பாளர்கள் கோ.அறிவழகன், மா.அன்பழகன், தெய்வ.இளையராஜா, பொதுக்குழு உறுப்பினர் இரா.பாலு, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.





புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் விராலிமலை சட்டமன்றத் தொகுதி, அன்னவாசல் கிழக்கு ஒன்றியம், ஆரியூரில் விராலிமலை சட்டமன்ற தொகுதி கழக வெற்றி வேட்பாளர் கே.கே.செல்லபாண்டியன் நமது வெற்றி சின்னமாம் உதயசூரியனுக்கு, பொதுமக்களை நேரில் சந்தித்து வாக்குச் சேகரித்தார். நிகழ்வில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கார்த்திக் தொண்டைமான், ஒன்றியச் செயலாளர்கள் கே.எஸ்.சந்திரன், எம்.கோவிந்தராஜன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கீரை.தமிழ் ராஜா, முகம்மது ரிஷா, எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, வழக்கறிஞர் ராமையா, புல்வயல் சுந்தர்ராஜ், ராயல் சபா, கை.பழனிச்சாமி, எழில்ராஜா மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி நிர்வாகிகள் உள்ளனர்.